திரு. இரா. தாமரைக்கனி : இப்படிப்பட்ட புராதன நாணயங்களை சிலர் கைப்பற்றி சொத்துக்கள் வாங்கியதாகவும், மகளுக்கு கலியாணம் முடித்திருப்பதாகவும், பெண்களுக்கு நகைகள் போட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? எல்லா நாணயங்களும் உருக்கப்பட்டு விட்டதா? மீதி ஏதாவது உருக்கப்படாமலிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன். 43 நாணயங்கள்தான் கைப்பற்றப்பட்டன. மீதி 99 நாணயங்கள் கைப்பற்றப்படவில்லை. அதனுடைய சவரன்கள் 40 இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. மதிப்பு ரூபாய் 40,735 இருக்கும் என்று கருதப்படுகிறது. நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : கைப்பற்றப்பட்ட இந்த நாணயங்கள் மாராட்டிய மாநிலத்தில் வைத்து உருக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா ? இனிமேல் இப்படிக் கிடைக்கக்கூடிய தங்க நாணயங்களை அவை உருக்கப்படாமல் பாதுகாக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கைப்பற்றியதை நிச்சயமாக உருக்கமுடியாது. கைப்பற்றுவதற்கு முன்னால் உருக்கியிருக்கலாம். அதில் ஒருவர் பகவன் கணபதி நமது மாநிலத்தைச் சேர்ந்தவர். அவர் மராட்டிய மாநிலத்திற்குச் சென்றுவிட்டார் என்ற செய்தியும் வந்திருக்கிறது. அதைப் பற்றியும் அரசு ஆராய்ந்து வருகிறது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஆத்தூர் நகராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

* **வினா எண் 406—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரிய பகுதியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் குடிநீர் வழங்க புதிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இத் திட்டம் எவ்வளவு ரூபாய் செலவில் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) ஆத்தூர் நகராட்சி குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு வறட்சி நிவாரணத்தின் கீழ் ரூபாய் 17,73 000 செலவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிக்கப்பட்டுள்ளது.

1982 மார்ச் 8]

திரு. இரா. தாமரைக்கனி : சேலம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணித்திட்டத்தின்கீழ் என்னென்ன முறைகளில் எவ்வளவு செலவழிக்கப் பட்டுள்ளது ? இந்த வேலைகளைக் கவனிக்க குழுக்கள் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சேலம் மாவட்டத்தில் பல்வேறு இனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டது ரூபாய் 401.8 இலட்சமாகும். ஆனால் செலவழித்தது ரூபாய் 407.8 இலட்சமாகும். பல்வேறுயிடங்களில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வறட்சிப் பணிகளில் என்னென்ன வேலைகள் நடைபெற்றன என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். எல்லா மாவட்டங்களைப் போலவே அங்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் குழு போடப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம் : வட ஆற்காடு மாவட்டத்தில் பல கிராமங்களில் திரும்பவும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் வட ஆற்காடு மாவட்டம் வறட்சியைச் சந்திக்க இருப்பது அரசுக்குத் தெரியுமா ? மீண்டும் வறட்சி ஏற்படும்போது ஆழ்துளைக் கிணறுகள் போடும் திட்டம் விரைந்து அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தமிழ் நாட்டில் எங்கெங்கு வறட்சி வந்தாலும் அப்படி வறட்சி வாராமல் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு தயாராயிருக்கிறது. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அறிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மத்திய அரசிடமிருந்து ஏழாவது நிதிக்குழு பரிந்துரைப்படி வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஏதாவது உதவி கேட்கப் பட்டுள்ளதா ?, மத்திய அரசு உதவியைப் பெற, வறட்சி பணி நிதி முழு அளவில் தமிழ்நாடு பெற மத்திய அரசு நிபந்தனைகள் விதித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் அவர்களே, ஏற்கனவே பல முறை இதற்கு நான் பதில் தெரிவித்திருக்கிறேன். அதை வாங்கி படித்துக் கொள்ளவும்.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சிக்கு ரூபாய் 17.73 இலட்சம் குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ரூபாய் 17.73 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளதா அல்லது கடனாக வழங்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மானியமும், கடனும் கலந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

பி.டி. தேர்வு பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கான சம்பளம்

* வினா எண் 407—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.டி. தேர்வு பெற்ற பின்னரும் செகண்டரி கிரேடு சம்பளமே பெற்று வருகிற நிலை இருந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) ஆசிரியர்களுக்கு அவர்கள் பணி புரியும் பணியிடங்களுக்குரிய ஊதிய விகிதம் தான் அளிக்கப் படுகிறது. அவர்கள் பெறும் கல்வித் தகுதிக்கேற்ப ஊதிய விகிதம் வழங்கப் படுவதில்லை. நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பி.டி. பணி யிடங்கள் காலி ஏற்பட்டாலோ அல்லது புதிய பி.டி. பணியிடங்கள் ஏற்படுத்தப் பட்டாலோ, பி.டி. தகுதி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் அப்பணியிடங்களில் அமர்த்தப்படும்பொழுது, அவர்கள் பி.டி. கிரேட் சம்பள விகிதம் பெறுகின்றனர்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு படித்து, அதற்குப் பிறகு பி.டி. தகுதி பெற்று, அதற்காக ஊதிய உயர்வு தரவேண்டுமென்று நீண்டகாலமாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதை அனுதாபத்தோடு, விரைவில் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தகுதியை உயர்திக் கொண்ட நிலையில் அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்துகொண்டு, அந்த தகுதிக் கேற்ப சம்பளம் கொடுப்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. பி.டி. பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு பற்றி அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அவர்களுடைய பள்ளியில் வேலை செய்யக்கூடிய காலத்தில், தேர்வு எழுதி பி.டி. பாஸ் செய்ததற்குப் பிறகு, பல ஆசிரியர்கள் அதே பள்ளியில் வேலை காலியிருந்தும், வேறு பக்கத்திலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து போடு வதும், அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுக்காமல் இருப்பதுமான